RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22460

OPEN ACCESS

# மறுபக்கம் நாவலில் சாதிய பாகுபாடுகள்

**த. அனுஷா [அ, *], ஜெ. சுஜாதா [அ]**

[அ] தமிழாய்வுமையம், இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி - 627012) நெய்யூர் - 629802, தமிழ்நாடு, இந்தியா.

# Caste Discrimination at Marupakkam Novel

**T. Anusha [a, *], J. Sujatha [a]**

[a] Research Centre of Tamil, Lekshmipuram College of Arts and Science, Neyyoor-629802 (Manonmaniam Sundaranar University, Tirunelveli - 627012), Tamil Nadu, India.

* Corresponding Author: anushatlc@gmail.com

Received: 28-06-2022
Revised: 22-09-2022
Accepted: 27-09-2022
Published: 09-10-2022

**ABSTRACT**

Caste is another name for the basic social control of society. Earlier there were classes by profession. Then he started doing business in succession. Then based on profession, caste emerged and developed. Man has reached a state of high and low. An upper caste is reduced to a lower caste. The purpose of this article is to explore this.

**Keywords:** Caste, Society, Marupakkam Novel, Profession

## முன்னுரை

சாதி என்பது செய்யும் தொழிலின் அடிப்படையில் ஏற்பட்ட ஒன்று என்று நம்பினர் பலர். சாதிக் கலவரங்கள் இன்றைக்கும் சமுதாயத்தை சீரழிக்கும் ஒரு பிரச்சினையாக உள்ளது. மேல்மட்டத்தில் ஈழவர்களும் நாயர்களுமிருந்தனர். இவர்களில் ஈழவர்கள் வட திருவிதாங்கூரிலும் நாடார்கள் தென் திருவிதாங்கூரிலும் மிகுதியாக வாழ்ந்தனர். நாடார்களுக்கு அடுத்தபடியாக தட்டான், தச்சன், கல்தச்சன், கொல்லன் ஆகிய ஐந்து உட்பிரிவுகளை கொண்ட கம்மாளர் எந்த பிரிவினர் இருந்தனர். சலுகைகள் முற்றிலும் மறுக்கப்பட்ட புலையர்களும், பறையர்களும் நில அடிமைகளாக இருந்தனர் இவர்கள் ஊருக்கு வெளியில் குடிசைகட்டி சுகாதாரமற்ற சூழ்நிலையில் வாழ்ந்து வந்தனர். சாதிப் பிரச்சனைகள் நாளடைவில் அதிகமாகி கொண்டுள்ளது என்பதை மறுபக்கம் நாவல் மூலம் அறிய முடிகிறது.

## சாதிப் பாகுபாடு

தொழிலை அடிப்படையாகக் கொண்டே சாதிகள் அமைந்திருக்க வேண்டும். முதலில் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற பிரிவுகளே இருந்திருக்க வேண்டும் என்பதை,

"அறுவகைப் பட்ட பார்ப்பன பக்கமும்

ஐவகை மரபின அரசர் பக்கமும்

இரு மூன்று மரபின் ஏனோர் பக்கமும்"

என்று தொல்காப்பியர் கூறுகிறார் (Ilampooranar, 2005). பின்னர் இச்சாதி அமைப்பு பல்வேறு சாதிகளாக உருவாகி மனித சமுதாயத்திற்கு கொடுமைகளை செய்து வருகின்றது. இதைப் பற்றி கூறும் போது "முற்காலத்தில் சாதி என்ற அமைப்பு இருந்தாலும் அனைவரும் ஒன்றாக தான் இருந்தனர். சமயம் என்ற அமைப்பு என்று உருவானதோ அன்றே சாதிய ஒடுக்குமுறையும் உருவாகிவிட்டது. எவ்வாறெனில் வழிபாட்டு முறையில் வேறுபாடு தோன்றியது. உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்றும் தாழ்ந்தவன் கோயில் உள்ளே இதுவரை தான் செல்ல வேண்டும் என்றும் உருவானது" என்கிறது தலித் இலக்கியமும் சமூக விழிப்புணர்வும் என்ற நூல் (Anjugam, 2000).

## சாதிக் கொடுமைகள்

சட்டத்திற்கு முன் அனைவரும் சமம். அனைவருக்கும் ஒரே சாதி என்று காலம் காலமாக நம் நாட்டு மக்கள் வழங்கி வருகின்றனர். ஆனால் சமுதாயத்தில் சாதி, மத வேறுபாடு இன்னும் தலை தூக்கி வருவதை காணமுடிகிறது.

"எல்லா ஜாதியும் இருக்கிறது

இல்லாத ஒரே ஜாதி

மனித ஜாதி"

என்று மனதில் எண்ணத்தை கவிஞர் வெளிப்படுத்தி உள்ளார் (Mansoor, 2008).

திருவிதாங்கூரில் மிகவும் கேவலமாகவும் இழிவாகவும் கருதப்பட்டவர்கள் நாடார் என்பவர்களே, முற்றிலும் நிர்வாண நிலையில் தான் இவர்கள் காணப்பட்டனர். அன்றைய திருவிதாங்கூர் சமுதாயம் பல தீய பழக்கவழக்கங்களுக்கு உட்பட்டிருந்தது. சாதி கட்டுப்பாடுகள் என்ற முறையில் மனிதநேயமற்ற பல கட்டுப்பாடுகளின் தன்மை கீழ்சாதி இந்துக்கள் மீது விதிக்கப்பட்டிருந்தது. தாழ்த்தப்பட்ட சாதியினர் தீண்டத்தகாதவர்கள் என உயர்சாதியினரால் அழைக்கப்பட்டனர்.

புலையர்கள் அருகில் செல்வதும் பேசுவதும் காண்பதும் கூட தீட்டு என்ற நிலை இருந்தது. "ஒரு புலையனை ஒரு பிராமணன் பார்க்க நேருமாயின் அவன் உடனடியாக ஆற்றிலோ, குளத்திலோ சென்று குளித்து வர வேண்டும். அதை செய்யாமல் பிராமணன் இல்லம் புகுந்து உணவு அருந்துவானாகில் அவன் சாதிக்கு புறம் தள்ளப்படுவான்" என்று கூறப்பட்டுள்ளது (Iyanthottam Sukumaran, 2007).

## கீழ் சாதியினருக்கு தடை செய்யப்பட்ட இடங்கள்:

உயர் சாதி இந்துக்கள் வாழ்கின்ற இடங்களில் கீழ் சாதி இந்துக்கள் நுழைவதற்கும், பொது கிணறுகள், குளங்கள், சாலைகள் போன்றவற்றை பயன்படுத்தக் கூடாது என்றும் தடை இருந்தது உயர் சாதி இந்துக்களின் கோயில்கள் மற்றும் அதன் அருகில் அமைந்த சாலைகளில் இவர்கள் நடப்பதற்கு தடை இருந்தது.

தெருமறிச்சான் என்ற தடை சுவர்கள் ஆங்காங்கே எழுப்பப்பட்டு இருக்கும். உயர் சாதி இந்துக்கள் சாலைகளில் வரும் போது கீழ் ஜாதி இந்துக்கள் ஓடி ஒளிந்து கொள்ள வேண்டும். உயர் ஜாதியில் உள்ளவன் மறைந்த பிறகே இவன் அந்த வழியாக போக முடியும்.

## ஆடை அணியத்தடை

உயர் ஜாதியினருக்கு நல்ல தரம் வாய்ந்த பட்டாடைகள் அணிய எந்த தடையும் இல்லை. ஆனால் கீழ் ஜாதியினருக்கு அவ்வாறு அணிய முடியாது. கீழ் ஜாதி ஆண்களும் பெண்களும் இடுப்பிற்கு மேலும் கீழும் உடல் மறையும் படியாக ஆடைகள் அணியக்கூடாது.

## ஆபரணங்கள் அணிய தடை

தங்கம் வெள்ளி போன்ற ஆபரணங்கள் கூட அணிய கீழ் சாதி மக்களுக்கு அனுமதி இல்லை. ஆனால் மேல் சாதி மக்களுக்கு அது பற்றி கவலை கிடையாது. எல்லா வகையிலும் கீழ் சாதியினரின் நிலை மிகவும் கொடுமையானது.

## அடிமைத்தனம்

கீழ் ஜாதி மக்களை அடிமைகளாக கருதினர் கீழ்ஜாதி மக்கள் உலோகத்தால் ஆன பாத்திரங்களை பயன்படுத்தக் கூடாது. பசுக்கள் வளர்ப்பதற்கும், வீடுகளில் ஓடு போடுவதற்கும், பால் கறப்பதற்கும், வாகனங்களை பயன்படுத்துவதற்கும், இவர்களுக்கு உரிமை இல்லை. மீனவர்கள் வசிக்கும் இடங்கள் மூன்று அடி உயரத்திற்கு மேல் இருக்கக் கூடாது. பெண்கள் இடுப்பில் தண்ணீர் எடுக்கக்கூடாது. தலையில் வைத்து கைகளை உயர்த்தி குடத்தில் பிடித்தபடி தான் கொண்டு வர வேண்டும்.

## வனச்சாதி மக்களின் நிலை

வன சாதியைச் சார்ந்தவர்களும் தாழ்ந்த சமுதாயத்தை சேர்ந்தவர்களாகவே கருதப்பட்டனர். இவர்கள் காட்டில் கூவிக்கொண்டே இருப்பர். தான் இங்கு இருப்பதை உயர் சாதியினருக்கு அடையாளம் காட்ட கூவிக்கொண்டிருப்பர். உயர் ஜாதியினர் இந்த சத்தத்தை கேட்டு கைதட்டினால் போதும் அவன் ஓடி ஒளிந்து கொள்வான். "உயர் சாதியினர் கண்ணில் பட்டால் இந்த வனச் சாதியை சார்ந்தவன் கொலை செய்யப்படுவான்." ஆசிரியர் பொன்னீலன் அவர்கள் மறுபக்கம் நாவலில் சின்ன நீலன் எனும் கதாபாத்திரம் வழியாக சாதி என்பதை சாதிக்காரப் பாம்பு என்கிறார் (Iyanthottam Sukumaran, 2007). இதன் மூலம் கீழ் சாதியினரின் நிலையை அறிய முடிகிறது.

இதனை,

"சாதி என்னும் பாம்பு

சதிகாரப்பாம்பு - சரிதான்

மானமாய் இரு மகனே

மாளுங்கூலி தன்னாலே

இதுவுஞ் சரிதான்"

என்று வலியுறுத்தப்பட்டுள்ளது (Poneelan, 2010).

தாழ்ந்த ஜாதியினர் தலைப்பாகை அணிவதற்கும் தோளில் துண்டு அணிவதற்கும் அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. ஈழவர்கள் திருவிதாங்கூரின் வடக்கில் நெருக்கமாக வாழ்ந்தனர். தீயர் ஆகிய பெயர்களிலும் அழைக்கப்பட்டனர். "சாதி அமைப்புக்கு வெளியே இருந்தால் தீட்டுக்குரிய சாதியினராகவே கருதப்பட்டனர். பலர் தனியாக பயங்கர காடுகளையும் பொருட்களஞ்சியங்களையும் யானைக் குழிகளையும் காவல் செய்ய நிர்பந்திக்க பட்டனர்." (Iyanthottam Sukumaran, 2007).

## அடிமை முறை ஒழிப்பு

அடிமை முறை தொன்று தொட்டு பரவலாக நடைமுறையில் இருந்து வந்த ஒன்றாகும். அடிமை முறை மேல் நாடுகளிலும் இருந்து வந்தது. ஆங்கில சட்ட மன்றம் 1806 மற்றும் 1811 -ல் இரண்டு சட்டங்களை ஏற்றுக்கொண்டு இங்கிலாந்தின் அடிமை முறையை ஒளித்தது ஆனால் 19-ம் நூற்றாண்டின் தொடக்க காலங்களிலும் திருவிதாங்கூரில் ஆங்காங்கே அடிமைமுறை வழக்கில் இருந்தது. விவசாயப் பணிகளுக்காக அடிமைகள் பயன்படுத்தப்பட்டனர். ஆடு மாடுகளைப் போல்

அவர்களை விற்ப்பதும் வாங்குவதுமாக இருந்தது. ஒரு அடிமைக்கு ரூபாய் மூன்று முதல் பதினாறு வரையிலான விலை இருந்தது. 1819 இல் கேரளத்து அடிமைகளை குறித்து மலபார் மாவட்ட ஆட்சித் தலைவர் துரை எழுதிய கடிதத்தின் வாயிலாக வரி நிலுவைகளுக்காக அடிமைகள் விற்கப்படுகின்ற முறை மலபார்க் கரையில் நிறுத்தப்பட்டது.

## அடிமைகளின் வாழ்க்கை முறைகள்

அடிமைகள் வீடுகளில் இருந்து வெளியே செல்லும் போது கையில் தடிக்கம்பை பிடித்து அதை ஒரு குச்சியால் தட்டிக் கொண்டு செல்வர். இந்த சத்தம் அடிமை வருவதற்குரிய ஓர் அறிகுறியாகும். வயல்களில் அடிமைகள் வேலை செய்யும்போது அவர்கள் இருப்பதை உயர் சாதியினர் அறிவதற்கு இலைகளையும் மரக்கிளைகளையும் வைக்க வேண்டும். "அடிமைகள் புறச்சேரிகளிலும் சதுப்பு நிலங்களிலும் கதவுகள் மற்றும்; கூரை அற்ற கம்புகளாக ஓலைவேயப்பட்ட குடிசைகளில் வாழ்ந்தனர். இக்குடிசைகளில் ஒருவர் நேரே நிமிர்ந்து செல்ல முடியாது குனிந்தே செல்ல வேண்டும்". (Isaac Aruldhas, 2010).

அடிமைகள் பொருட்களை வீதியில் கூவி விற்கும் பழக்கம் விசித்திரமானது. பொருள்களுக்கு குறைவான விலை கிடைத்தது. இதனால் பொருளாதாரத்திலும் இவர்கள் சுரண்டப்பட்டனர். அடிமைகள் கோயில் யானைகளுக்கு தென்னை ஓலைகளை இலவசமாக சுமந்து செல்ல வேண்டும். பிராமணர்களுக்கும், நாயர்களுக்கும், சைவ வெள்ளையர்களுக்கும் கூலி இல்லாமல் இவர்கள் வேலை செய்ய வேண்டும். அடிமைகள் பசு வளர்த்தால் நாயரே பால் கறந்து செல்வார். ஒருபகுதியை கொடுத்துவிட்டு அடிமையின் உழைப்பை இவர்கள் நுகர்ந்து வாழ்வர்.

## முடிவுரை

நமது தமிழகத்தில் பல்வேறு சாதிகள் உள்ளன என்பதை தமிழ் நாவல்கள் நமக்கு தெளிவு படுத்துகின்றன. பறையர், சக்கிலியர், நாடார் என பலவகை சாதியினர் இருப்பதை மறுபக்கம் நாவல் சுட்டிக்காட்டுகிறது. இவர்களை மேல் சாதி கீழ்சாதி என பிரித்து காட்டுகின்றன. மேல் சாதி மக்களிடம் கீழ்சாதி மக்கள் எல்லா வகையிலும் அடங்கி செல்பவர்களாகவே இருந்தன. தாழ்த்தப்பட்ட சாதியினரை மேல் சாதியினர் அடக்கி ஒடுக்கி எந்த ஒரு சுதந்திரமும் இல்லாமல் அவர்களை அடிமைகளாகவே நடத்தினர் என்பதை கட்டுரை முதல் அறிய முடிகிறது.

## References

Anjugam, S. (2000) Dalit Iyakkamum Samooga Vizhipunarvum, Aruna Pathipagam, Chennai, India

Ilampooranar (2005) Tholkappiyam, Saratha Pathipagam, Chennai, India

Isaac Aruldhas, G. (2010) Kumari Mannil Christhavam, Scott Christian College, Nagercoil, India

Iyanthottam Sukumaran, (2007) Kumariyai Meetone Marshall Nesamani, Santhini Pathipagam, Chennai, India

Mansoor, J. (2008) Kavitai Ilakiyam, New Century Book House, Chennai, India

Poneelan (2010) Marupakkam - New Century Book House, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License